| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| | **சாதாரணக்கூட்டம்**<br>2022ம் ஆண்டு ஜூலை மாதம் 27.07.2022-ம் தேதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நகர மன்றத்தில் சாதாரணக் கூட்டம் நகராட்சியின் நகர் மன்ற கூட்ட அரங்கில் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் கூட்ட நடவடிக்கைகள்.<br><br>T.N. M[illegible]<br>**நகரமன்ற தலைவர்**<br>திருக்கோவிலூர் நகராட்சி<br><br>இருப்போர்கள்:<br>1. கு. உமா மகேஸ்வரி - நகர்மன்ற துணைத்தலைவர்<br>2. கோ. சுந்தர்ராஜ் - நகர்மன்ற உறுப்பினர்<br>3. சா. கோவிந்தராஜன் - " "<br>4. இ. சம்பத் - " "<br>5. டி. பிரேமா - " "<br>6. நீ. கலையரசி - " "<br>7. நீ. அர்ச்சனா - " "<br>8. சா. புவனேஸ்வரி - " "<br>9. கு. மகாலிங்கம் - " "<br>10. தே. ஸ்ரீனிவாசன் - " "<br>11. பா. சுமா - " "<br>12. எம். சாந்திபுஷ்பா - " "<br>13. டி. ஆதி - " "<br>14. உ. அண்ணாதுரை - " "<br>15. ஆர். சக்திவேல் - " "<br>16. கே. ரவிவேல் - " "<br>17. வ. முகேஷ் - " " | | |

# தீர்மான புத்தகம்

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| | 18. அ. தமிழ்வாணி - நகர் மன்ற உறுப்பினர் | | |
| | 19. செ. வினோத்பாபு - " " | | |
| | 20. ஏ. பானுமதி - " " | | |
| | 21. மு. அம்மணம் - " " | | |
| | 22. ஜ. பஷீரா - " " | | |
| | 23. மு. ஜெயந்தி - " " | | |
| | 24. சி. சக்திவேல் - " " | | |
| | 25. செ. உமா - " " | | |
| | 26. சொ. பாஸ்கர் - " " | | |

பொருள் எண்.1

திருக்கோவிலூர் நகராட்சியில் 05/2022 மற்றும் 06/2022 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு. இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை பதிவுகள் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

| மாதம் | பிறப்பு | இறப்பு | இறந்து பிறந்தவை |
|---|---|---|---|
| 05/ 2022 | 36 | 15 | - |
| 06/ 2022 | 23 | 18 | - |

அலுவலக குறிப்பு :– பார்வையிட்டு பதிவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண் 57. அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.2

திருக்கோவிலூர் நகராட்சிக்கு 05/2022 மற்றும் 06/2022 மாதத்தில் வரப்பெற்ற அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு :– பார்வையிட்டு பதிவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண் 58. அனுமதிக்கப்பட்டது

# தீர்மான புத்தகம்



| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
| --- | --- | --- | --- |
| | பொருள் எண்.3<br>திருக்கோவிலூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் 05/2022 மற்றும் 06/2022 மாத நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :– பார்வையிட்டு பதிவு செய்ய மன்றம் அனுதிக்கலாம் | 59. | அங்கீகரிக்கப்பட்டது |
| | பொருள் எண். 4<br>கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் நகராட்சி தரம் உயர்த்தப்பட்ட புதிய நகராட்சிகளுக்கு புதிய அலுவலக கட்டடம் அமைக்கப்படும் என நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பு எண்.23 ன் படி ரூ.3.50 கோடியில் புதிய அலுவலக கட்டிடம் அமைக்க சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.7628/2022 /MA1 நாள்.08.06.2022 –ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு மதிப்பீட்டு ரூ.3.50 கோடி அலகு தொகையில் ரூ.2.00 கோடி அரசின் சிறப்பு நிதியாகவும் எஞ்சியுள்ள ரூ.1.50 கோடி நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே புதிய அலுவலக கட்டிடம் கட்ட நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.1.50 கோடி பங்கு தொகை வரப்பெற்றுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :– சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி புதிய அலுவலக கட்டிடம் அமைக்க நகராட்சியின் பொது நிதியிலிருந்து ரூ.1.50 கோடி பங்கு தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | 60 | அங்கீகரிக்கப்பட்டது |
| | பொருள் எண். 5<br>திருக்கோவிலூர் பேரூராட்சியானது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதையடுத்து திருக்கோவிலூர் நகராட்சியானது தனித்த உள்ளூர் திட்டக் குழும பகுதியினை நகர் ஊரமைப்பு சட்டம் 1971 10 (1) (6) ன் கீழ் அறிவிப்பு செய்து G.O.Ms.No.23 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD4(2)) துறை நாள்.09.03.2022 அரசாணை பெறப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையானது தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையினை தமிழ் தினசரி செய்திதாளில் ஒரு நாள் மட்டில் பிரசுரம் செய்து விளம்பரப்படுத்திட மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் தினசரி நாளிதழில் பிரசுரம் செய்து விளம்பரம் செய்ததற்கு அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | 61. | அங்கீகரிக்கப்பட்டது |

# தீர்மான புத்தகம்

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| | **பொருள் எண்.6**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான பூங்கா விளையாட்டு திடல் மற்றும் திறந்த வெளியிடம் ஆகியவற்றை அரசிதழில் அறிவிக்கை செய்ய உரிய விபரம் சமர்பிக்க சென்னை நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.5094/2022 / டிபி-2 நாள்.08.03.2022 தேதிய கடிதத்தின் படி உரிய கருத்துரு சமர்பிக்க தெரிவிக்கப்பட்டதற்கிணங்க திருக்கோவிலூர் நகராட்சிக்கு சொந்தமான பூங்கா விளையாட்டு திடல் மற்றும் திறந்த வெளியிடம் ஆகியவற்றை அரசிதழில் அறிவிக்கை செய்ய உரிய (Auto Cad Drawing)-ல் வரைப்படம் வரைந்து அளிக்க உள்ளூரில் விலைப்புள்ளி பெறவும் குறைந்த விலைப்புள்ளி வழங்கும் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும், அதற்குண்டான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>அவசர அவசியத்தை கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தலைவர் அவர்களின் முன் பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள எ.பார்த்திபன், எஸ்.எ.கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கவும், பூங்கா விளையாட்டு திடல் மற்றும் திறந்த வெளியிடம் அரசிதழில் வெளியீடு செய்ய தயார் செய்தமைக்கு பட்டியல் படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். | 62. | அனுமதிக்கப்பட்டது |
| | **பொருள் எண். 7**<br>2022– 2023 ம் ஆண்டிற்கு திருக்கோவிலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் திட்ட பராமரிப்பு பணியில் பழுதடையும் தருவாயில் இந்தியா மார்க் II கைபம்பு, மின் மோட்டார்கள், பம்புகள், பேனல் போர்டுகள் வால்வுகள் NRV, குழாய் உதிரி பொருட்கள் மற்றும் பம்புகள் ரீவைண்டிங் செய்வதற்கு அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு உள்ளூரில் விலைப்புள்ளி பெற்று குடிநீர் திட்ட பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- பொது மக்களின் நலன் கருதி அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு உள்ளூரில் விலைப்புள்ளி பெற்று மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | 63. | அனுமதிக்கலாம் |
| | **பொருள் எண்.8**<br>திருக்கோவிலூர் நகராட்சிக்கு சொந்தமான கரடி கிராமத்தில் உள்ள உரத்திடலில் மின் மோட்டார்களின் ஓயர்கள் அடிக்கடி சமூக விரோதிகளால் திருடப்படுகிறது. மேலும் உரத்திடலில் உள்ள குப்பைகளை தீயிட்டு செல்கின்றார்கள். எனவே இச்சம்வங்களை கண்காணிக்கவும், உரத்திடலில் நடைபெறும் திடக்கழிவு பணிகளை கண்காணிக்கவும், கண்காணிப்பு கேமரா பொருத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். | 64. | அனுமதிக்கப்பட்டது |

# தீர்மான புத்தகம்



| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| | பொருள் எண்.9<br><br>திருக்கோவிலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகள் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரம் தொடர்பாக மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்களின் கூட்டத்தொடரில் தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை வழங்கப்படும் என்றும் அவர்களுக்கு எவ்வித சிரமமுமின்றி வியாபாரம் செய்ய ஏற்ற சூழல் உருவாக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அதனை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்.20789/2021/UPA1.நாள்.16.06.2022தேதி கடிதத்தில் சாலையோர வியாபாரிகளின் பாதுகாப்பு விதிகள் 2015 ன் படி, நடப்பாண்டில் சாலையோர வியாபாரிகளை கண்டறிய புதியதாக கணக்கெடுப்பு செய்யப்பட்டு, Biometric & QR Bar Code டன் கூடிய அடையாள அட்டை வழங்கவும், அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட ஏதுவாக விரிவான திட்ட(DPR) அறிக்கை தயார் செய்யவும், Online மூலம் ஒப்பந்த புள்ளி கோரவும், விரைவாக இப்பணியை மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணி மேற்கொள்ளவும் ஒப்பந்த புள்ளி அறிவிப்பு செய்திடவும் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு :- இப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>(கோப்பு ந.க.எண்.255/2022/அ1) | 65. | அனுமதி வழங்கப்பட்டது |

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

பொருள் எண்.10

திருக்கோவிலூர் நகராட்சியில், 15 வது நிதிக்குழு மான்ய திட்டம் 2021-2022 ன் கீழ், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.31118/2021/CFC நாள்.20.06.2022- Untied Grant 2021-2022 ம் ஆண்டுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 06.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதையும் மேற்படி பணிக்கு கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**15வது நிதிக்குழு மான்ய நிதி (15th CFC-Un Tied) 2021-2022**

| வ. எண் | பெயர் | மதிப்பீட்டு தொகை ரூபாயில் | வரப்பெற்றுள்ள ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டு தொகைக்கு | |
|---|---|---|---|---|
| | | | எ.கண்ணன் | எம்.கே.சங்கர் |
| 1 | வள்ளலார் தெரு குறுக்குத் தெரு (177006R047) சிமெண்ட் சாலை அமைக்கல் | 6.40 | (-) 0.01% குறைவு | (+)0.01% கூடுதல் |
| 2 | அம்பேத்கார் நகர் 1வது குறுக்கு தெரு (177026R197) சிமெண்ட் சாலை அமைக்கல் | 3.00 | (-) 0.01% குறைவு | (+)0.01% கூடுதல் |
| 3 | சங்கரன் நகர் பிரதான தெரு (177026R218) சிமெண்ட் சாலை அமைக்கல் | 6.20 | (-) 0.01% குறைவு | (+)0.01% கூடுதல் |
| 4 | மீனாட்சி நகர் (177005R021) சிமெண்ட் சாலை அமைத்தல் | 8.70 | (+) 0.01% கூடுதல் | (-)0.01% குறைவு |
| 5 | மீனாட்சி நகர் குறுக்குத் தெரு (177005R022) சிமெண்ட் சாலை அமைத்தல் | 1.60 | (+) 0.01% கூடுதல் | (-)0.01% குறைவு |
| 6 | அரசு ஊழியர் நகர் பிரதான சாலை 3வது குறுக்குத் தெரு (177014R109) சிமெண்ட் சாலை அமைத்தல் | 10.00 | (-) 0.01% குறைவு | (+)0.01% கூடுதல் |
| | மொத்தம் | 35.90 | | |

அலுவலக குறிப்பு

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எ.கண்ணன், ஒப்பந்ததாரர் திருக்கோவிலூர் என்பவர் வரிசை எண்.1,2,3 மற்றும் 6 உள்ள பணிகளுக்கும் திரு.எம்.கே.சங்கர்,ஒப்பந்ததாரர் திருக்கோவிலூர் என்பவர் வரிசை எண்.4 மற்றும் 5 உள்ள பணிகளுக்கும் என்பவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு ந.க.எண்.38/ 2022/இ1)

66. அனுமதிக்கப்பட்டது

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

பொருள் எண்.11

திருக்கோவிலூர் நகராட்சியில், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் (மாநிலங்களவை) 2021-2022 ன் கீழ், இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கள்ளக்குறிச்சி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.ஆ5.493/2022, நாள்.23.05.2022- ன் கீழ் 4.00 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோவிலூர் நகராட்சி அங்கவை சங்கவை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இரண்டு கழிவறைகள் கட்டுதல் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 15.07.2022 அன்று மேற்படி பணிக்கு கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித்திட்டம் (மாநிலங்களவை)-2021-2022</u>

| வ. எண் | பெயர் | மதிப்பீடுத் தொகை ரூபாயில் | வரப்பெற்றுள்ள ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டு தொகைக்கு | |
|---|---|---|---|---|
| | | | எ.கண்ணன் | எம்.கே.சங்கர் |
| 1 | திருக்கோவிலூர் அங்கவை சங்கவை அரசு பெண்கள் மேல்நிலை பள்ளியில் இரண்டு கழிப்பறைகள் கட்டுதல். | 4.00 | (+) 0.06% கூடுதல் | (-)0.02% குறைவு |
| | | | | |

அலுவலக குறிப்பு

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எம்.கே.சங்கர், ஒப்பந்ததாரர் திருக்கோவிலூர் என்பவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு ந.க.எண். 117/2022/இ1)

தீர்மான எண் 67. அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.12

திருக்கோவிலூர் நகராட்சியின் 2021 - 22 ம் ஆண்டுக்கான ஆண்டு கணக்குகள் சமர்பிக்க தெரிவித்து வரப்பெற்றுள்ள உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை, விழுப்புரம் அவர்களின் கடிதம் தெ.க.எண்.18/அ2/2022 நாள்.01.07.2022ன் படி பேரூராட்சியாக இருந்ததை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால் பழைய மென்பொருள் மற்றும் நகராட்சி மென்பொருள் வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் இதர அரசு திட்டங்கள் குறித்து வகைப்படுத்தி ஆண்டு கணக்கு தயாரித்த CA நிறுவனத்தின் விலைப்புள்ளி பெற்று 2021-2022 ஆண்டு கணக்கு தயார் செய்யவும் அதற்குண்டான செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

தீர்மான எண் 68. அனுமதி வழங்கலாம்

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
| --- | --- | --- | --- |
| | பொருள் எண்.13<br><br>திருக்கோவிலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட மின்கம்பங்கள் பயன்படுத்தகூடிய தெருமின் விளக்குகள் மற்றும் அதன் உதிரிபொருட்கள் பெற 2022 – 2023 ம் ஆண்டிற்கான ஆண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் அரசு நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தில் எவரும் கோர முன்வராததால் பொதுமக்களின் அத்தியாவசிய தேவையை கருத்தில் கொண்டு அரசு நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் விலைப்புள்ளிகள் பெற்று பொருட்கள் வாங்கிட மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br><br>அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தலைவர் அவர்களின் முன்அனுமதி குறைந்த விலைப்புள்ளியை ஏற்று தேவையான பொருட்களை வாங்கி கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | 69. | அங்கீகரிக்கப்பட்டது |
| | பொருள் எண்.14<br><br>சென்னை நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 10383/2021 மா.தி2 நாள்.27.06.2022 ன் படி பருவ மழையினால் ஏற்படும் இடர்பாடுகளை தவிர்த்திட வடிகால்கள், பாலங்கள் மற்றும் சிறுபாலங்கள், சாக்கடை மண் அடைப்புகளை பிரதான கால்வாய் அடைப்புகளில் உள்ள குப்பைகளை அகற்றிடவும், இப்பணிகளுக்கு தேவையான தளவாட பொருட்கள் மற்றும் பெரிய மழைநீர் வடிகால் வாய்காலில் சேகரமாகியுள்ள வடிகால் படிவுகளை ஜேசிபி மற்றும் பொக்லைன் பயன்படுத்தி 100 சதவீதம் சுத்தம் செய்திட அறிவுறுத்தப்பட்டமைகிணங்க மேற்படி பணிக்கு செலவிடப்படும் தொகை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். | 70. | அங்கீகரிக்கப்பட்டது |
| | பொருள் எண் : 15<br><br>திருக்கோவிலூர் பேரூராட்சி அரசாணை நிலை (MS) எண். 94 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.11.2020 ன் படி திருக்கோவிலூர் நகராட்சியின் தரம் உயர்த்தப்பட்ட நிலையில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் மக்கும் குப்பை மக்காத குப்பை வாங்கும் தள்ளுவண்டிகள் டிப்பர் லாரிகள், வளம் மீட்பு பூங்கா, நகராட்சி பராமரிப்பிலுள்ள பொது கழிப்பிடங்கள் அனைத்திற்கும் பேரூராட்சி என்று இருப்பதை நகராட்சி என பெயர் திருத்தம் செய்து வர்ணத்தில் (Paint) எழுதுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br><br>நகராட்சி என பெயர் மாற்றம் செய்திட உள்ளூரில் குறைந்த விலைப்புள்ளி கொடுக்கும் நிறுவனத்திற்கு உத்திரவு வழங்கிடவும் அதற்குரிய செலவினத்தினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | 71. | அங்கீகரிக்கப்பட்டது |

# தீர்மான புத்தகம்

| வ. எண் | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| | பொருள் எண்: 16<br><br>திருக்கோவிலூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கொடிக்கம்பத்தின் அடித்தளம் சிதலமாகி உள்ளதாலும் 75வது சுதந்திர தினவிழா முன்னிட்டு தலைவர், துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் நகராட்சி பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் கொடியேற்றும் நாளில் கொடிகம்பம் அருகில் நின்று மரியாதை செய்யும் பொருட்டு இட நெருக்கடி உள்ளதாலும், புதியதாக 5x5 என்ற அளவில் அடித்தளம் மற்றும் கொடிகம்பம் மாற்றி அமைத்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br><br>இவ்வருடத்தில் 75 வது சுதந்திர தினம் சீரிய முறையில் கொண்டாட கொடிகம்பம் சீரமைக்கவும் மேற்படி பணிகளை செய்யவும் அதற்குரிய செலவினத்தினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | 72 | அங்கீகரிக்கப்பட்டது |
| | பொருள் எண்: 17<br><br>திருக்கோவிலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 16. சந்தப்பேட்டை துப்புரவு பணியாளர் குடியிருப்பு பகுதி மற்றும் வனம் மீட்பு பூங்கா ஆகிய பகுதிகளிலுள்ள கழிவுநீர் செப்டிக்டேங் கழிவுநீர் நிரம்பிவிட்டதால் கழிவுநீர் வண்டி மூலம் சுத்தம் செய்ய விலைப்புள்ளி கோரி பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது<br><br>அலுவலக குறிப்பு - மன்றம் அனுமதிக்கலாம். | 73 | அங்கீகரிக்கப்பட்டது |
| | பொருள் எண்: 18<br><br>திருக்கோவிலூர் நகராட்சி பொது சுகாதார பணிக்கு குப்பை அள்ளும் மினி வண்டி TN32.C.8431 என்ற உள்ள வண்டி பழுதடைந்ததை பழுது நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது<br><br>அலுவலக குறிப்பு - மன்றம் அனுமதிக்கலாம். | 74. | [illegible] |
| | பொருள் எண்: 19<br><br>திருக்கோவிலூர் நகராட்சி பகுதிகளில் தினசரி சேகரிக்கப்படும் குப்பை [illegible] வனம் மீட்பு பூங்காவில் கொட்டப்படுகிறது. அதிக அளவில் குப்பை உள்ளதால் உரக்கிடங்கில் சேகரிக்கும் குப்பைகளை Dumping செய்யவும் மற்றும் குப்பைகளை சமன் செய்வதற்கும் டிராக்டர், டாடா ஏசி வண்டி சென்று வர முடியவில்லை. மிகவும் சிரமம் உள்ளது எனவே JCB வண்டி மூலம் குப்பை தள்ளுவதற்கும் உள்ளூரில் விலைப்புள்ளிகள் பெற்று தேர்வு பயன்படுத்திக் கொள்ளவும் மேற்படி செலவினத்தினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு - மன்றம் அனுமதிக்கலாம். | 75. | அங்கீகரிக்கப்பட்டது |

# தீர்மான புத்தகம்

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

பொருள் எண்.20

திருக்கோவிலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கட்டப்பட்டு வரும் கட்டிடங்களுக்கு கட்டிட வரைப்பட வரைவாளராக பதிவு செய்ய கோரி கீழ்கண்டுள்ள நபர்கள் விண்ணப்பித்துள்ளனர். மேற்படி நபர்கள் BE Civil Engineering, M.Tech ARCHITECTURE கல்விதகுதிச்சான்று சமர்பித்துள்ளனர். எனவே கீழ்கண்டுள்ள நபர்களை திருக்கோவிலூர் நகராட்சியில் கட்டிட வரைபட வரைவாளராக பதிவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | விண்ணப்பதாரர் பெயர் / விலாசம் | கல்வி தகுதி |
|---|---|---|
| 1 | ச.புகழேந்தி<br>27.ஆசிரியர் நகர்<br>மணம்பூண்டி<br>கண்டாச்சிபுரம் வட்டம்<br>விழுப்புரம் மாவட்டம் | BE Civil Engineering |
| 2 | டி.கோகுல்ராஜ்<br>நெ.114 வடக்கு தெரு<br>திருக்கோவலூர் | M.Tech Architecture |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண்: 76. [illegible]

பொருள் எண்.21

திருக்கோவிலூர் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் பதிவு செய்ய வேண்டி வி.சந்திரசேரகன், 1/4 பள்ளிக்கூடத்தெரு, காட்டுப்பையூர் அஞ்சல், திருக்கோவிலூர் வட்டம். என்பவரின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண்: 77. [illegible]

பொருள் எண்.22

திருக்கோவிலூர் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய தரை வாடகைகள் தொடர்பான வழக்குகள் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண். Review Appeal .214/2018 முதல் 219 /2018 முடிய நிலுவையுள்ளதை அரசு வழக்கறிஞரை சந்தித்து எதிர்வாதுரை தாக்கல் செய்து விரைந்து முடித்து கொடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தில் தீர்மானித்தல்

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண்: 78. [illegible]

# தீர்மான புத்தகம்

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| | **பொருள் எண்.23**<br><br>திருக்கோவிலூர் நகராட்சிக்கு சொந்தமான திடக்கழிவு மேலாண்மை திட்ட தள்ளுவண்டிகள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள தள்ளுவண்டிகளையும் மற்றும் 25 ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தப்பட்ட பயன்பாட்டிற்கு கீலகமாக நிலையில் உள்ள சுகாதார டிராக்டர் மற்றும் ட்ரைலர் மிகவும் கீலகமாகவும், உள்ள வாகனத்தை பொது ஏலம் விட ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் | 79. | [illegible] |
| | **பொருள் எண்.24**<br><br>திருக்கோவிலூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் வாங்கப்பட்ட மினி லாரி அடிக்கடி பழுதடைந்து குப்பை சேகரிக்க சிரமாக உள்ளது. மேலும் சிறிய சந்து உள்ள தெருக்களில் சென்று தினசரி சேகரமாகும் குப்பைகளை சேகரிக்க ஒரு டாடா ஏசி வாகனம் மட்டும் உள்ளதால் சிறிய சந்து உள்ள தெருக்களில் குப்பைகளை நேரடியாக வாகனத்தில் பெறுவது சிரமமாக உள்ளது. எனவே புதியதாக டாடா ஏசி வாகனம் ஒன்றும், இரண்டாம் நிலை சேகரிப்பு வாகனமான மினிலாரி மூலம் உரத்திடலுக்கு குப்பைகளை கொண்டு செல்ல மினி லாரி BHARAT BENZ ஒன்று வாங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் | 80. | [illegible] |
| | **பொருள் எண்.25**<br><br>திருக்கோவிலூர் நகராட்சிக்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையத்தில் பொன்விழா ஆண்டு திட்டத்தில் உள்ள 20 ஹெச்.பி மோனோ பிளாக் மின் மோட்டார் சந்தப்பேட்டை, என்.ஜி.ஜி.ஓ நகர் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. 2003 ஆம் ஆண்டு பொருத்தப்பட்டது. கடந்த 20 ஆண்டுகளாக மின் மோட்டார் இயங்கி கொண்டிருப்பதால் Shaft, Pump, Impler தேய்மானம் அடைந்ததால் அடிக்கடி பழுது ஏற்படுவதால் புதியதாக 20 ஹெச்.பி மோனோ பிளாக் மின் மோட்டார், பேனல் போர்டு, உதிரி பொருட்களை அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் விலைப்புள்ளி பெற்று மேற்படி பொருட்களை வாங்கி பயன்படுத்தி கொள்ளவும் இச்செலவினத்தை குடிநீர் திட்ட நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் | 81. | [illegible] |

# தீர்மான புத்தகம்

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| | **பொருள் எண்.26**<br>திருக்கோவிலூர் நகராட்சிக்குட்பட்ட குடிநீர் விநியோகம் செய்யும் பகுதிகளில் கிண்டி தலைமை குடிநீர் பகுப்பாய்வு நிலையத்தில் இருந்து 18.07.2022 ம் தேதியில் இருந்து பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் பரிசோதனை செய்ததில் அவர்கள் கூறிய அறிவுரைப்படி குடிநீரில் நீர்ம குளோரின் கலக்கும்படி அறிவுறுத்தினர். மேலும் 23.07.2022 அன்று கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரைப்படி பொதுமக்களுக்கு விநியோகம் செய்யும் குடிநீரில் நீர்ம குளோரின் பயன்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளார். எனவே 2022- 2023 ம் ஆண்டிற்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் விலைப்புள்ளி பெற்று மேற்படி நீர்ம குளோரின் பயன்படுத்தி கொள்ளவும், நீர்ம குளோரின் ( Liquid Chlorine) பயன்படுத்தும் மின் மோட்டார் மற்றும் உதிரி பொருட்கள் வாங்கி பயன்படுத்திக் கொள்ளவும் இச்செலவினத்தை குடிநீர் திட்ட நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் | 82. | அங்கீகரிக்கப்பட்டது |
| | **பொருள் எண்.27**<br>திருக்கோவிலூர் நகராட்சியில் நகரங்களில் தூய்மை பணிக்கான மக்கள் இயக்கம் நடத்த நகராட்சி நிர்வாக இயக்குநர்/ திட்டஇயக்குநர் (தூ.இ.தி) அவர்களின் கடிதம் ந.க.எண்.9514/2022/ தி1.தூ.இ.தி நாள்.11.05.2022ன் கடிதத்தின்படி பிரிதி வாரம் 2 வது மற்றும் 4 வது சனிக்கிழமைகளில் நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம் நடத்த அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க எதிர்வரும் 03.06.2022-ல் இருந்து நகரங்களில் தூய்மை பணிக்கான மக்கள் இயக்கம் துவக்க விழாவிற்கு மன்றத்தலைவர்,துணைத்தலைவர் , மன்ற உறுப்பினர்கள், ரோட்டரி கிளப், வணிகர் சங்கம், தன்னார்வு குழுக்கள், குடியிருப்போர் நலச்சங்கம் பொது மக்கள் மற்றும் அனைத்து பணியாளர்கள் பேரணி செல்ல மேற்கொள்ள ஆகும் செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் | 83. | அங்கீகரிக்கப்பட்டது |

# தீர்மான புத்தகம்

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| | **பொருள் எண்.28**<br>திருக்கோவிலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட ஏரிக்கரை மூலையித் ஆக்கிரமிப்பு சம்மந்தமாக திரு.எம்.தஸ்தகீர் என்பவரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடங்கப்பட்ட அமைதிப்பு வழக்கு எண்.1403/2019 க்காக வாதிட்ட வழக்கறிஞர் கட்டணம் ரூ.15000/- சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமதி.வி.யமுணாதேவி என்பவருக்கு வழங்கப்பட்டதற்கு மன்றத்தில் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் | 84 | [illegible] |
| | **பொருள் எண்.29**<br>திருக்கோவிலூர் நகராட்சி பொதுசுகாதார பணிக்கு 2022-2023ஆம் ஆண்டுக்கு பயன்படுத்த பட்டியலில் கண்டுள்ள விலைப்புள்ளி விகிதத்தில் சுண்ணாம்பு நீர், பிளிச்சிங் பவுடர், பினாயில் ஆகிய பொருட்கள் வாங்குவதற்கு விலைப்புள்ளிகள் கோரப்பட்டதற்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துக் கொண்ட டி.எஸ்.சொல்யூஷன் நெல்லிக்குப்பம் என்ற நிறுவனம் பொருட்கள் வாங்கியமைக்கு பட்டியல் படி செலவினம் மேற்கொண்டமைக்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>அவசர அவசியம் கருதி பொது சுகாதார பணியினை கருத்தில் கொண்டு குறைந்த விலைப்புள்ளி டி.எஸ்.சொல்யூஷன் நெல்லிக்குப்பம் கொடுத்துள்ள நிறுவனத்தை சப்ளை செய்ய அங்கீகரிக்க மன்றம் அனுமதிக்கலாம் | 85. | அனுமதிக்கப்பட்டது |

# தீர்மான புத்தகம்

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| | பொருள் எண்.30<br><br>திருக்கோவிலூர் நகராட்சி எல்லையில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டியான 1. என்.ஜி.ஜிநகர் 2. சந்தப்பேட்டை உள்ளிட்ட 20 ஹெச்.பி மோனோ ப்ளாக் பைப்புகள் மற்றும் மோட்டார்கள் பழுதடைந்ததை சீர் செய்யும் பொருட்டு குடிநீர் உதிரி சாமான்கள் உள்ளூரில் அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்தில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள 1.சந்தான எலக்ட்ரிகல்ஸ் & ஏஜென்சிஸ் மற்றும் 2) ஸ்ரீ லட்சுமி எலக்ட்ரிகல்ஸ் என்ற நிறுவனத்திற்கு பொருட்கள் வாங்கியமைக்கு பட்டியல் படி செலவினம் மேற்கொண்டமைக்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம் | 86. | அனுமதிக்கப்பட்டது |
| | பொருள் எண்.31<br><br>திருக்கோவிலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருமின்விளக்குகள் உதிரிபொருட்கள் சப்ளை செய்ய மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உள்ளூரில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள பாரதி எலக்ட்ரிக்கல்ஸ், 131/2 மேற்கு தெரு, திருக்கோவிலூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கி தெருமின் உதிரி பொருள் வாங்கியமைக்கு பட்டியல் படி செலவினம் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு :– அவசர அவசியம் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்<br><br>(கோப்பு எண். நக.எண்.169/ 2022/இ1) | 87. | அனுமதிக்கப்பட்டது |

# தீர்மான புத்தகம்

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

பொருள் எண்.32

திருக்கோவிலூர் நகராட்சியில், கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2022-2023 ஆம் ஆண்டின் கீழ், பணிகள் மேற்கொள்வதற்கு, அரசாணை (நிலை) எண். 88, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (NS) துறை, நாள். 17.06.2022ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு கடிதம் ந.க.எண். 001/2022/D01, நாள். 28.06.2022ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, அதற்கிணங்க கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு, 15.07.2022 அன்று மின்னனு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | திருக்கோவிலூர் நகராட்சிக்குட்பட்ட தலைமை நீரேற்றும் நிலையம் மயானத்தில் புல எண். 533ல் நவீன எரிவாயு தகன மேடை அமைத்தல் (வார்டு எண். 01) | ரூ. 149.00.000 | M/s. QUN Interiors Private Ltd, Chennai-600018 | +4.16% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| | | | M/s. நெப்டியூன் ஆட்டோமேஷன், நசியனூர், ஈரோடு-638107 | +10.41% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

மேற்காணும் பணிக்கு மதிப்பீட்டு விலையினைவிட கூடுதலான விலை விகிதத்தில் இரு ஒப்பந்ததாரர்களும் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளனர். மேலும், வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி +4.16% மதிப்பீட்டைவிட கூடுதலான விலை விகிதம் அளித்துள்ள **M/s. QUN Interiors Private Ltd, Chennai** என்ற நிறுவனத்தாரை விலைக்குறைப்பு செய்துதர 25.07.2022 அன்று கோரியதில், 26.07.2022 அன்று ஒப்பந்ததாரர் அளித்துள்ள கடிதத்தில், தற்போதுள்ள கட்டுமானப் பொருட்களின் கடும் விலையேற்றத்தின் காரணமாகவும், பணிபுரியும் பணியாளர்களின் சம்பள உயர்வின் காரணமாகவும், ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள +4.16%-லிருந்து, (மதிப்பீட்டைவிட கூடுதல்) குறைவாக பணியினை செய்ய இயலாது எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே, திட்டப்பணியின் அவசர, அவசியத்தினை கருதி, மதிப்பீட்டைவிட கூடுதலாக +4.16%-க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **M/s. QUN Interiors Private Ltd, Chennai** என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணியின் அவசர, அவசியத்தினை கருதி, +4.16% மதிப்பீட்டைவிட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள, **M/s. QUN Interiors Private Ltd, Chennai** என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு கூடுதலாகும் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 143 / 2022 / இ1)

88. குறைவான ஒப்பந்தப்புள்ளியான + 4.16% அளித்துள்ள M/s QUN Interiors Private Ltd Chennai என்ற நிறுவனத்தின் ஏற்கப்பட்டது

# தீர்மான புத்தகம்

| வ. என். | பொருள் |
|---|---|

பொருள் எண்.33

திருக்கோவிலூர் நகராட்சியில், கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2022-2023 ஆம் ஆண்டின் கீழ், பணிகள் மேற்கொள்வதற்கு, அரசாணை (நிலை) எண். 88, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (NS) துறை, நாள். 17.06.2022ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு கடிதம் ந.க.எண். 001/2022/DD1, நாள். 28.06.2022ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, அதற்கிணங்க கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 15.07.2022 அன்று மின்னனு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | திருக்கோவிலூர் நகராட்சிக்குட்பட்ட அண்ணா நகர் வார்டு எண். 14ல் நூலகத்துடன் கூடிய அறிவுசார் மையம் கட்டுதல் | ரூ. 192,00,000 | M/s. ASR கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், திருக்கோவிலூர் | +4.95% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| | | | M/s. ஜோதி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், திருச்சி-62010 | +10.20% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

மேற்காணும் பணிக்கு மதிப்பீட்டு விலையினைவிட கூடுதலான விலை விகிதத்தில் இரு ஒப்பந்ததாரர்களும் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளனர். மேலும், வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி +4.95% மதிப்பீட்டைவிட கூடுதலான விலை விகிதம் அளித்துள்ள M/s. ASR கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், திருக்கோவிலூர் என்ற நிறுவனத்தாரை விலைக்குறைப்பு செய்துதர 25.07.2022 அன்று கோரியதில், 26.07.2022 அன்று ஒப்பந்ததாரர் அளித்துள்ள கடிதத்தில், தற்போதுள்ள கட்டுமானப் பொருட்களின் கடும் விலையேற்றத்தின் காரணமாகவும், பணிபுரியும் பணியாளர்களின் சம்பள உயர்வின் காரணமாகவும், ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள +4.95%-லிருந்து (மதிப்பீட்டைவிட கூடுதல்) குறைவாக பணியினை செய்ய இயலாது எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே, திட்டப்பணியின் அவசர, அவசியத்தினை கருதி, மதிப்பீட்டைவிட கூடுதலாக +4.95%-க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. ASR கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், திருக்கோவிலூர் என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணியின் அவசர, அவசியத்தினை கருதி, +4.95% மதிப்பீட்டைவிட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள, M/s. ASR கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், திருக்கோவிலூர் என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு கூடுதலாகும் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 012 / 2022 / இ1)

| தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|
| 89. | மதிப்பீட்டை விட கூடுதல் +4.95% அளித்துள்ள A.S.R கன்ஸ்ட்ரக்ஷன் என்ற நிறுவனத்தை [illegible] |

# தீர்மான புத்தகம்



| வ. எண். | பொருள் |
|---|---|

பொருள் எண்.34

இந்நகராட்சியின் பொதுசுகாதார வாகனம் **TN 32 C 8431** தகுதிசான்று பெற ஏதுவாக வாகன பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 13.07.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சம்) | பெறப்பட்டுள்ள விலைப்புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | ஜவஹர் ஆட்டோ ஒர்க்ஸ் 77பி, மத்தலாங்குளத்தெரு திருவண்ணாமலை. | 4.00 | 389632/- |
| 2 | கண்ணம்மாள் ஆட்டோ ஒர்க்ஸ் 18 முத்துவிநாயகர் கோவில் தெரு திருவண்ணாமலை | | 407650/- |
| 3 | திருமலை வெங்கடேவரா ஒர்க் ஷாப் கீழ்நாச்சிப்பட்டு,திண்டிவனம் ரோடு, திருவண்ணாமலை. | | 416780/- |

அலுவலகக்குறிப்பு

குறைந்த விலைப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள ஜவஹர் ஆட்டோ ஒர்க்ஸ், திருவண்ணாமலை அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.22/2020/எச்1)

பொருள் எண்.35

அரசு முதன்மை செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ்துறை சென்னை அவர்களின் நேர்முக கடித எண். PR.3/9346 நாள்.23.07.2022 ன் படி எதிர்வரும் 75 சுதந்திர தினா விழாவினை சிறப்பாக கொண்டாட இந்நகராட்சியில் உள்ள அனைத்து வீடுகளிலும் தேசிய கொடி ஏற்றி சிறப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இந்நகராட்சியில் உள்ள வீடுகளுக்கு 8200 தேசிய கொடி சப்ளை செய்யவும், சுதந்திர தினவிழா அன்று வருகை தரும் நகரமன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் அனைத்து நகரமன்ற உறுப்பினர்களுக்கும், சுதந்திர போராட்ட தியாகிகள் வாரிசுகள் மற்றும் அழைப்பாளர்களுக்கு மரியாதை செய்யவும், அலங்கார மின் விளக்குகள், வண்ணக் காகித தோரணங்கள், தலைவர் சிலைகளுக்கு வர்ணம் பூசுதல் போன்ற பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினம் வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- 75 வது சுதந்திர தினவிழாவினை சிறப்பாக கொண்டாட ஆகும் செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண்.356/2020/எச்1)

| தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|
| 90 | குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கலாம் |
| 91. | அனுமதிக்கலாம். |

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

பொருள் எண்.36

திருக்கோவிலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட குடிநீர் விநியோகம் செய்யும் பகுதிகளில், தலைமை குடிநீர் பகுப்பாய்வு கிண்டியில் இருந்து 18.07.2022 ந் தேதி அன்று பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரை பரிசோதனை செய்தனர் மேற்படி ஆய்வின் அடிப்படையில் குடிநீரில் நீர்ம குளோரின் கலக்கும் படி அறிவுறுத்தினர் மேலும் 23.07.2022 அன்று கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரடி ஆய்வு செய்யப்பட்டு வழங்கப்பட்ட அறிவுரைக்கிணங்க பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீரில் நீர்ம குளோரின் பயன்படுத்துமாறு அறிவுறுத்தியதின் பேரிலும் தலைமை நீரேற்ற நிலைய நீர் தேக்க தொட்டி மற்றும் கீழையூர் மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளில் நீர்ம குளோரின் கலப்பதற்கு அமைக்க தேவையான குடிநீர் திட்ட உபகரணங்கள் மின்மோட்டார், பம்பு, சின்டெக்ஸ் டேங்க் மற்றும் உதிரி பொருட்களுக்கு 25.07.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. எனவே வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்க மன்றம் ஒப்புதலுக்கு கோரப்படுகிறது.

| வ. எண் | பெயர் | மதிப்பீடுத் தொகை ரூபாயில் | வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகைக்கு | | |
|---|---|---|---|---|---|
| | | | Sri Sabari Engineering, Chennai | Vijay Electricals, Chennai. | Appu Industries, Chennai. |
| 1 | தலைமை நீரேற்ற நிலையம் நீர் தேக்க தொட்டி | 9.90 | (–) 0.00% குறைவு | (+)2.92% கூடுதல் | (+)1.66% கூடுதல் |
| 2 | கீழையூர் மேல்நிலை நீர் தேக்க தொட்டி | 4.90 | (–) 0.00% குறைவு | (+)3.98% கூடுதல் | (+)2.14% கூடுதல் |

அலுவலக குறிப்பு :– நீர்ம குளோரின் கலப்பதற்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வ.எண் 1–ல் கண்டுள்ள ஸ்ரீ சபரி இன்ஜினியரிங், சென்னை என்ற நிறுவனத்தை மன்றம் அங்கீகரித்து சப்ளை உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்

92. குறைந்த விலை புள்ளி அளித்துள்ள
Sri Sabari Engineering சென்னைக்கு
பணி ஆணை வழங்கலாம்.